பக்கங்கள் 20+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 02 செவ்வாய்க்கிழமை 18.11.2025 | அதிர்வு 111

## யாழில் ரயிலுடன் மோதி ஆண் ஒருவர் உயிரிழப்பு



கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயிலுடன்மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். 02▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# இளங்குமரன் எம்.பி. மீது சுமந்திரன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல்

## மேன்முறையீட்டு மன்றில் இன்று ஆராய்வு

மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற ஒரு வழக்குத் தொடர்பில் நீதிமன்றத்துக்கு வெளியில் பகிரங்கமாகத் தெரிவித்த சில கருத்துக்கள் மூலம் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தை தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனும், ஜெயபாலன் கஜபாகு என்பவரும் இழைத்துள்ளனர் எனத் தெரிவித்து அவர்கள் இருவருக்கும் எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு இன்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. 02▶

# எந்த அரசு அதிகாரத்துக்கு வந்தாலும் சிங்களப் பேரினவாதப் போக்கு மாறாது!

## திருமலை புத்தர் சிலை விவகாரம் இதற்கு எடுத்துக்காட்டு என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் காட்டம்




(எஸ்.நிதர்ஷன்)

"மாற்றம் என்று சொல்லி இனவாதமற்ற புதிய அரசியல் கலாசாரம் ஒன்று உருவாகும் என்று நம்பி வாக்குச் செலுத்திய தமிழ் மக்கள் இன்று முழுவதுமாக அரசினால் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். இது இன்று நேற்றல்ல 76 வருடகாலமாக இந்த நாட்டில் இதுதான் நடந்தேறியிருக்கின்றது."

– இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது, மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 05▶




# மன்னார் கடற்கரையோரங்களில் மீண்டும் கரையொதுங்கும் பிளாஸ்டிக் துகள்கள்!

**(மன்னார் நிருபர்)**

நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக தென் பகுதியில் கரை ஒதுங்கிய பிளாஸ்டிக் துகள்கள் தற்போது வடபகுதி கரையோரங்களில் கரையொதுங்கும் நிலையில் மன்னார் கடற்கரையோரங்களிலும் தற்போது கரையொதுங்கி வருகிறது.

வடக்கு கரையோரம் சார்ந்த பகுதிகளில் பேசாலை, காட்டாஸ்பத்திரி, சிறுத்தோப்பு ஆகிய கடற்கரையோரங்களில் குறித்த பிளாஸ்டிக் துகள்கள் கரையொதுங்கி வருகின்றமை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இதேவேளை அண்மையில் இந்து சமுத்திரத்தின் கேரளா பகுதியிலே விபத்துக்குள்ளான எம்.எஸ்.சி.எல்.எஸ்.3 என்கிற கப்பலில் காணப்பட்ட பிளாஸ்டிக் துகள்கள் மன்னார் கடற்கரையோர பகுதிகளில் கரை ஒதுங்கிய நிலையில் ஏற்கனவே குறித்த பிளாஸ்டிக் துகள்களை அகழ்வு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில் ஏற்பட்டுள்ள கால நிலை மாற்றம் காரணமாகத் தென் பகுதியில் கரை ஒதுங்கிய பிளாஸ்டிக் துகள்கள் தற்போது மீண்டும் மன்னார் கடற்கரை பகுதிகளிலும் கரையொதுங்கி வருகிறது.

---

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் – சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள ரயில் கடவைக்கு அருகில் இன்று செவ்வாய்க்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நல்லூர் பகுதியைச் சேர்ந்த விஜயரத்னம் மோகன்தாஸ் (வயது 42) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இளங்குமரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் ரோஹந்த அபேசூரிய மற்றும் நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோரைக் கொண்ட ஆயத்தின் முன்னால் இந்த வழக்கு இன்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிராளிகள் இருவரும் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

எதிராளிகளில் ஒருவரான இளங்ககுமரன் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி சாமர நாணயக்கார என்பவர் மற்றைய எதிராளியான கஜபாகுவுக்குச் சட்டத்தரணி ஒருவரை நியமிக்க அவகாசம் கோரியமையால், அதற்கு இடமளித்து, வழக்கு வரும் பெப்ரவரி 5ஆம் திகதிக்கு விசாரணைக்கு நியமிக்கப்பட்டது.

மனுதாரரான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் சார்பில் சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் முன்னிலையாகியிருந்தார்.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய சிறிலோகநாதன் என்ற அகதி ஒருவர் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர் சார்பில் தமது கனிஷ்ட சட்டத்தரணிகளுடன் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் முன்னிலையாகி, அவரைப் பிணையில் விடுவிக்க வாதாடி இருந்தார். பொலிஸார் கடுமையாக ஆட்சேபித்தமையால் அன்றைய தினம் பிணை வழங்கப்படவில்லை.

இரண்டு தினங்களுக்குப் பின்னர் சிறிலோகநாதன் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் நீதிமன்ற வளாகத்தில் காணொளிப் பதிவுகளுக்குப் பேட்டியளித்த இளங்குமரன் எம்.பியும், கஜபாகு என்பவரும், தங்களுடைய அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்துவதற்காக, நாடு திரும்பிய அகதியை சுமந்திரன் தனது சட்ட வாதாட்டத்தின் மூலம் விளக்கமறியலில் வைக்கச் செய்து, நீதிமன்றத்தோடு இணைந்து முறையற்ற வகையில் செயற்பட்டார் எனக் கூறியிருக்கின்றார் என்று சுமந்திரன் இப்போது தாம் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மல்லாகம் நீதிமன்ற வழக்குப் பதிவுகள், காணொளிப் பதிவுகள் போன்றவற்றையும் மனுதாரர் தமது மனுவோடு இணைத்துள்ளார்.

இன்று மனு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிராளிகளில் ஒருவரான ஜெயபாலன் கஜபாகு என்பவருக்குச் சட்டத்தரணி முன்னிலையாகாத நிலையில் அதற்குக் கால அவகாசம் வழங்கி வழக்கை பெப்ரவரி 5 ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.



# பொது அறிவித்தல்

## மாநகர சபை, யாழ்ப்பாணம்
## பாதீடு - 2026

யாழ். மாநகர சபையின் 2026 ஆம் ஆண்டிற்கான பாதீடு(வரைபு) 2025.11.18 ஆம் தொடக்கம் 2025.12.02 ஆம் திகதி வரை

**யாழ். பிரதேச செயலகம்**
**நல்லூர் பிரதேச செயலகம்**
**யாழ்.மாநகர சபை - பொதுசனத் தொடர்பு பகுதி**
**யாழ்.பொது நூல் நிலையம்**

ஆகிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இவ்வரைபு பாதீட்டினை பரசீலித்து பாதீட்டினை மேலும் முன்னேற்றகரமானதாக ஆக்குவதற்கு தேவையான தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகளினை எதிர்வரும் 2025.11.26 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாநகர சபை செயலகத்திற்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

2025.11.18

**திருமதி.மதிவதனி விவேகானந்தராஜா**
**முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்**

# ஹாட்லி மைந்தர்களின் நினைவேந்தல் நிகழ்வு

ஹாட்லி மைந்தர்களின் 26 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ். வடமராட்சி, பருத்தித்துறை – இன்பர்சிட்டி கடற்கரையில் அவர்களது குடும்பத்தவர், நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களால் நேற்று திங்கட்கிழமை உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.



கல்விச் செயற்பாட்டின் நிமித்தம் இன்பர்சிட்டி கடற்கரைப் பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராட்சியில் ஈடுபட்டிருந்த வேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர் தர வகுப்பு மாணவர்கள் நான்கு பேரின் 26ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவனாகக் கல்வி கற்று வந்த வேளை ரயில் விபத்தில் சிக்கி உயிரிழந்த மாணவனின் 21 ஆம் ஆண்டு ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் நேற்று காலை 9.00 மணியளவில் இன்பர்சிட்டி கடற்கரையில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

மாணவர்களின் திருவுருவப் படம் வைக்கப்பட்டு அவர்களுக்கு விருப்பமான உணவு வகைகள் படையலிட்டு மேற்கொள்ளப்பட்ட இந்த நினைவேந்தல் நிகழ்வில் ஹாட்லிக் கல்லூரியின் முன்னாள் அதிபர் தம்பையா கலைச்செல்வன், உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மலர் தூவி, சுடரேற்றி நினைவு வணக்கம் செலுத்தினார்கள்.

















# முள்ளிவாய்க்கால இனப் படுகொலைக்கான நீதியைப் பெற்றுத்தர அரசு ஒத்துழைக்கவேண்டும்

## ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றில் வலியுறுத்து

(விஜயரத்தினம் சரவணன்)

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலைக் குற்றவாளிகளான அப்போதைய ஆட்சியாளர்களையும், படைத்தரப்பினரையும் பன்னாட்டு நீதி விசாரணைக்கு உட்படுத்தி, தமிழினப் படுகொலைக்கான நீதியைப் பெற்றுத் தருவதற்கு தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு ஒத்துழைக்க வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (17) இடம் பெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று



கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலைக்கு பன்னாட்டு நீதி வேண்டும்.

21 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய மனிதப் பேரவலமாக முள்ளிவாய்க்கால் தமிழ் இனப் படுகொலைச் செயற்பாட்டைக் காண்கின்றோம்.

அத்தகைய முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகளான அப்போதைய ஆட்சியாளர்களையும், படைத்தரப்பினரையும் பன்னாட்டு நீதி விசாரணைக்கு உட்படுத்துவதற்கும்,தமிழ்இனப்படுகொலைக்கான நீதியைப் பெற்றுத் தருவதற்கும் இந்த அரசானது பூரண ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும் என்று இந்த உயரிய சபையின் ஊடாகக் கோருகின்றேன். – என்றார்.



# அனைத்துப் பல்கலைக் கழக நூலக உதவியாளர்கள் சங்க ஆண்டு விழா

(றிபாஸ்)

அனைத்துப் பல்கலைக் கழக நூலக உதவியாளர்கள் சங்கத்தின் 11 ஆவது ஆண்டு விழாவும், பல்கலைக் கழக நூலக சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள், ஓய்வு பெறவிருக்கின்றவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்றன.

அனைத்து பல்கலைக்கழக நூலக உதவியாளர் சங்கத்தின் தலைவர் எச். ஜீ.எஸ்.ஆர்.சோமரத்ன தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உதவி நூலகர் கலாநிதி பி.கே.எஸ்.மனதுங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

தென்கிழக்குப் பல்கலைக் கழக நூலக உதவியாளராக 27 வருங்கள் பணியாற்றி ஓய்வு பெறவுள்ள, அனைத்துப் பல்கலைக்கழக நூலக உதவியாளர்கள் சங்கத்தின் ஆலோசகரும், ஊடகவியலாளரும், பல்துறைக் கலைஞருமான



றஸாக் முஹம்மட் அலி அதிதிகளால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



# மறைந்த தென் மாகாண ஆளுநருக்கு வடக்கு ஆளுநர் இன்று இறுதி அஞ்சலி

மறைந்த தென் மாகாண ஆளுநரின் பூதவுடலுக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இன்று செவ்வாய்க்கிழமை இறுதி அஞ்சலி செலுத்தினார்.

தென் மாகாண ஆளுநர் பந்துல ஹரிசந்திர கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்ததைத் தொடர்ந்து, அவரின் பூதவுடல் காலியில் அமைந்துள்ள



மாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பொது அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்று அங்கு நேரில் சென்ற வடக்கு மாகாண ஆளுநர் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியதுடன், உறவினர்களுக்கு தனது இரங்கல்களையும் தெரிவித்தார்.

## எந்த அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“திருகோணமலையில் தமிழர் தாயகத்தில் கடற்கரைப் பிரதேசத்தில் சட்டத்துக்கு முரணாகப் புத்த பிக்குகளினால் புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டிருக்கின்றது.

அங்குள்ள தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பின் பின் சட்ட அனுமதியற்ற கட்டுமானம் என்று சொல்லி அந்தப் புத்தர் சிலை பொலிஸாரால் அப்புறப்படுத்தப்படுகின்றது. இதன்பிறகு நாடாளுமன்றத்தில் அரசால் புத்தர் சிலையின் பாதுகாப்பு காரணமாகத்தான் அப்புறப்படுத்தப்பட்டது, மீண்டும் நிறுவப்படும் என்ற பின் மீண்டும் அதே இடத்தில் அரசால் புத்த பிக்குகள் மற்றும் பொலிஸாருடன் இணைந்து அதே புத்தர் சிலை நிறுவப்படுகின்றது.

மாற்றம் என்று சொல்லி இனவாதமற்ற புதிய அரசியல் கலாசாரம் ஒன்று உருவாகும் என்று நம்பி வாக்குச் செலுத்திய தமிழ் மக்கள் இன்று முழுவதுமாக அரசினால் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். இது இன்று நேற்றில்லை 76 வருடகாலமாக இந்த நாட்டில் இதுதான் நடந்தேறியிருக்கின்றது. சட்டமுரணாக தமிழர் தாயகத்தில் வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்ட பின் நாடாளுமன்றத்தில் மீண்டும் நிறுவுவோம் என்று குறிப்பிட்டு மீளச் சிலையை மக்களின் எதிர்ப்புக்களை மீறி நிறுவியிருக்கும் செயல் எந்த அரசு அதிகாரத்துக்கு வந்தாலும் சிங்களப் பேரினவாதப் போக்கு மாறாது என்பதையே உணர்த்துகின்றது.

புத்தர் சிலையின் பாதுகாப்பு கருதி அகற்றப்பட்டிருக்கின்றது என்று சொல்லுவது தொடர்ச்சியாக சிங்கள மக்களிடத்தில் தமிழர்களை தீயவர்களாகச் சித்தரிப்பதைத்தான் எடுத்துக்காட்டுகின்றது. புத்தர் சிலையை வைத்தது யார்? அமைதியாக தங்கள் அன்றாட வாழ்க்கையை வாழும் தமிழ் மக்களைக் குழப்பியது யார் ? புத்தர் சிலையை அகற்ற வந்த பொலிஸாரின் கன்னத்தில் அறைந்தது யார்? இவர்களுக்கு எதிராக எல்லாம் இந்த நாட்டில் சட்டம் செயற்படாதா? நாட்டின் ஆட்சியாளர்கள் மக்களுக்கான சேவையை ஆற்றுவதைக் காட்டிலும் புத்த பிக்குகளின் பேச்சை வேதவாக்காக கேட்டு நடப்பதையே இனப்பிரச்சினை தொடங்கிய காலகட்டத்திலிருந்து அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஏன் இனப்பிரச்சினையின் முக்கிய காரணம் சிங்கள பௌத்த மயமாக்கல் தான். யுத்தத்தின் ஆணிவேரும் இது தான். தொடர்ச்சியாக தமிழர் நிலங்கள் புத்த வழிபாடு என்ற பெயரிலே பௌத்த சிங்களமயமாக்கப்பட்டுக்கொண்டே இருந்து வந்துள்ளது.

சிங்களக் குடியேற்றங்களால் தமிழர் குடியேற்றப் பரம்பல் மாற்றியமைக்கப்பட்டுக்கொண்டே இருந்து வந்துள்ளது. வரலாற்றில் மகாவலி ஓயா மற்றும் கல் ஓயா குடியேற்றம் என்று தமிழர் நிலங்கள் முற்றுமுழுதாக பெயர் மாற்றம் பெற்று முழுவதுமாக மாறியிருக்கின்றது. தொடர்ச்சியாக இன்று வரை தமிழர்களின் தொல்லியல் நிலங்களான குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை, உகந்தை மலை என்று பல்வேறு இடங்களில் பௌத்த ஆக்கிரமிப்பு நடைபெறுகின்றது.

தையிட்டி, திரியாய் என்று தமிழர் நிலங்களும் இதில் இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இதில் இருந்து தமிழ் மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் யார் ஆட்சிக்கு வந்தாலும் ஒரு விடயம் தவறாமல் நடக்கும். அது சிங்கள பௌத்தமயமாக்கல்.

ஏன் என்றால் அது திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிரல். தமிழ் மக்களின் இனப்பரம்பலை மாற்றுவதென்பது மாறி மாறிவரும் சிங்கள ஆட்சியாளர்களால் காலத்துக்குக் காலம் நிகழ்ந்தேறிக் கொண்டே இருந்து வந்துள்ளது.

சிங்கள மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் தமிழ் மக்கள் சிங்கள மக்களின் வழிபாடுக்கு என்றுமே எதிரானவர்கள் இல்லை. நாங்கள் அனைத்து மதத்தையுமே சமமாக மதிப்பவர்கள். அனைத்து சமய வழிபாடுகளையும் மதித்து நடப்பவர்கள் அவமதிப்பது கிடையாது. ஆனால் வழிபாடு என்ற பெயரிலே திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புக்களால் தமிழருடைய நிலங்கள் பறிபோவது என்பதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

தமிழர் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அவருக்குப் பல்வேறு கட்டுக்கதைகள் கட்டப்பட்டு பௌத்த நிலமாக மாறுவதற்கு எதிரானவர்கள். தமிழருடைய பூர்வீகம் கேள்விக்குறியாக்கப்படுவதற்கு எதிரானவர்கள். தமிழருடைய தொல்லியல் ரீதியான நிலம் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிரானவர்கள். தமிழர் குடியேற்றப்பரம்பல் மாற்றியமைக்கப்படுவதற்கு எதிரானவர்கள்.

தமிழர்களுடைய இனவிகிதத்தை திட்டமிட்டு மாற்றுவதற்கு எதிரானவர்கள். நாங்கள் ஏன் ஒற்றையாட்சி அரசமைப்பை மறுக்கின்றோம் தெரியுமா? இதனால் தான். சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு அடிபணிந்து கிடப்பதனால் தான்.

இங்கே முதலில் சுற்றுலாத்தளமான கடற்கரையில் புத்தர் சிலையை அமைப்பதற்கான அனுமதி வழங்கியது யார்? பிரதேச சபையிடமிருந்தோ இல்லாவிட்டால் நகர சபையிடமிருந்தோ அனுமதி பெறப்பட்டதா? இல்லை.முற்றமுழுதாக புத்தபிக்குகளே இலங்கையின் நிரந்தர நிறைவேற்று ஜனாதிபதிகளாக இருந்து வந்துள்ளனர்.

சுருக்கமாகச் சொல்லுவதென்றால் நாட்டின் அரச இயந்திரம் புத்த பிக்குகளுக்கு அடிபணிந்து இருக்கின்றது. முழு சட்டங்களையும் தங்கள் பக்கம் வளைக்கும் வலது சாரிகளின் பக்கம் அரசு முழுவதுமாக திரும்பி நிற்கின்றது. தாங்கள் இடது சாரிகள், கம்யூனிச சிந்தாந்தத்தை உள்வாங்கி கொண்டு செயற்படுவதாக தங்களை தாங்களே கூறிக்கொள்ளும் அரசு நாட்டில் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் பக்கம் ஏன் நிற்கவில்லை என்று ஒரு கேள்வி எழுகின்றது.

இன்னும் எவ்வளவு காலத்திற்கு நாங்கள் அடக்குமுறைகளையும் ஆக்கிரமிப்புக்களையும் தாங்கிக்கொள்ள முடியுமென்று தெரியவில்லை. இந்தப் பிரச்சினையில் ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது இலங்கையின் ஜனநாயகத்தை கேள்விக் குறியாக்கும் செயல்.

இது ஏன் இவ்வளவு காலமும் பயங்கரவாதத் தடைச்சட்டமும் எடுக்கப்படவில்லை. அரசியல் கைதிகளும் முழுவதுமாக விடுதலை செய்யப்படவில்லை. இதில் அரசு சார்பில் வடக்கு, கிழக்கில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்து கொண்டு இருக்கின்றார்கள்? தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக அரசியல் தீர்வுக்காக இது வரை வாய் திறந்திருக்கின்றார்களா?

ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் பின்னால் ஓர் அரசியல் அரங்கேற்றம் நிகழுவதாகவே நாங்கள் கணிக்கின்றோம்.

1. புத்தர் சிலையை வைத்துப் பார்த்து தமிழ் மக்கள் இன்னும் தமிழ் உணர்வுடன்தான் இருக்கின்றார்களா என்று பார்ப்பது. அவர்கள் எதிர்க்கின்றார்கள் என்றவுடன் அகற்றுவது சிங்கள மக்களிடத்தில் செல்வாக்குச் சரியுமென்ற பின் மீண்டும் நிறுவுவது.

2. அரசைப் பலவீனப்படுத்துகின்ற எதிர்க்கட்சியின் திட்டமிடலாக இருக்கலாம். ஒன்று தமிழ் மக்களிடத்தே பலவீனப்படுத்துவது அல்லது சிங்கள மக்களிடத்தே பலவீனப்படுத்துவது.

3. இறுதியில் புற்றுக்குள்ளே இருந்து வெளியே வந்திருக்கும் பாம்புகளைப் போல் சிலர் வெளியே வந்திருக்கின்றனர். யாரென்று பார்த்தால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆதரவளித்தவர்கள், மாவீரர் தினத்தை யார் எடுத்து நடத்துவது என்று தங்களுக்குள் சண்டையிட்டவர்கள். நீங்கள் உங்களுக்குள் முழுவதுமாக ஒற்றுமை அடையாவிட்டால் எதையுமே சாதிக்க முடியாது.

இறுதியாக எந்தவொரு சிங்கள பேரினவாத அரசும் தமிழ் மக்களின் பக்கம் நீதியின் பக்கம் நின்றதில்லை.

மிகச் சிறந்த அரசியல் தெளிவு பெற்ற நேர்மையான இளைய தமிழத் தேசிய அரசியல் கலாசாரம் வடக்கு, கிழக்கில் வரவேண்டும். அப்போதுதான் வெள்ளம் வர முன் அணை கட்ட முடியும்.

தமிழ் மக்களாக அனைவரும் உங்கள் சிந்தனைகளில் ஒன்றிணையுங்கள். நாங்கள் ஒன்றை நம்புகின்றோம் தூய தமிழ் தேசியம் நிச்சயம் வெல்லும்.” - என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வரலாற்றுப் பாடம்

கடந்த சில நாள்களாக திருகோணமலையிலும் கொழும்பிலும் நடந்தேறிய சம்பவங்கள் இலங்கைத் தீவின் மற்றொரு தேசிய இனமான தமிழர்களுக்கு மீண்டும் ஒரு படிப்பினையை நினைவூட்டி மீள உணர்த்தியிருக்கின்றன என்று கருதுகிறோம். அதனைச் சுட்டிக்காட்டி ஒரு தடவை தமிழர் மனதில் அதனைப் பதித்துக் கொள்ள வைப்பது நல்லது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் அளித்த வாக்கினால் பதவிக்கு வந்தவர் அநுரகுமாரதிஸநாயக்கா என்று கூற முடியாது. தமிழர்களின் வாக்குகள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வழிகாட்டலில் அந்தத் தேர்தலில் பெரும்பாலும் சஜித் பிரேமதாஸவுக்கே அளிக்கப்பட்டன.

அதன் பின்னர் பொதுத் தேர்தலில் தமிழர்களின் கணிசமான வாக்குகள் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவின் தேசிய மக்கள் சக்திக்கு அளிக்கப்பட்டன என்பது உண்மைதான்.

இந்த இரண்டு தலைவர்களும் பௌத்த - சிங்கள பேரினவாத மேலாதிக்க சிந்தனையைக் கைவிட்டு, நீதி, நியாயமான - கௌரவமான - தீர்வை தமிழர்களுக்கு தருவார்கள் என்ற நம்பிக்கையில்தான் இந்தத் தேர்தல்களில் தமிழர்கள் இவர்களுக்கு வாக்களித்தார்கள்.

ஆனால் திருகோணமலைச்சம்பவங்கள், அவற்றைத் தொடர்ந்து கொழும்பு எடுத்த நடவடிக்கைகள், அங்கு வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் போன்றவை தென்னிலங்கை அதிகார பீடத்தின் சிங்கள - பௌத்த மேலாதிக்க மனவமைப்பு எந்தக் காலத்திலும் அதிலிருந்து மீள்வே மீளாது என்பதைத் தெளிவாக நமக்கு வெளிப்படுத்தி உணர்த்தி நிற்கின்றது.

இந்த விடயத்தில் இதுவரை சஜித்தையோ அல்லது அநுரகுமார திஸநாயக்காவையோ ஆதரித்தவர்களை மாறி மாறிப் போட்டுத் தாக்குவது அல்லது சேறு வாரி வீசுவது அர்த்தமற்றது. மாறாக, இந்த விடயத்தின் மூலம் - இந்த விவகாரத்தின் வாயிலாக - உண்மை நிலை யாது என்பதைப் புரிந்து கொண்டு, யதார்த்தத்தை உள்வாங்கி, தீர்மானங்களுக்கு வருவதுதான் தமிழர்களுக்கு முக்கியமானது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தன்னுடைய மாவீரர் தின உரைகளில் அவ்வப்போது வெளிப்படுத்தி வந்த உண்மைதான் இது.

'தென்னிலங்கை ஆட்சிப் பீடம் சிங்கள - பௌத்த இதிகாச இனவாத சிந்தனைகளில் இருந்து இறங்கி வந்து, தமிழர்களுக்கு நியாயமான தீர்வு தரும் என்று நான் ஒருபோதும் நம்பவில்லை' என்றார் தலைவர் பிரபாகரன். அந்த விடயம்தான் இப்போதைய திருகோணமலைச் சம்பவங்கள் போன்ற நிகழ்வுகள் மூலம் மீண்டும் மீண்டும் உறுதியாகி வருகின்றது.

இலங்கை தீவின் தேசிய இனமான தமிழர்கள் இன்று தீவில் எண்ணிக்கை அளவில் சிறுபான்மையினராக இருக்கிறார்கள். அவர்களுக்கு நீதி செய்யப்பட வேண்டுமானால், அதற்கு இலங்கையின் அரசமைப்பு பௌத்த - சிங்கள மேலாதிக்க அரசமைப்பாக இல்லாமல் அது மதசார்பற்ற அரசமைப்பாக மாற்றப்பட வேண்டும்.

அப்படி மாற்றுவதற்கான 'தில்' அல்லது திராணி அல்லது முதுகெலும்பு அல்லது அரசியல் திடசங்கற்பம் அநுரகுமார திஸநாயக்காவிடம் கூட கிஞ்சித்தும் கிடையாது. சஜித் பிரேமதாஸ அது குறித்து சிந்திக்கக் கூடத் துணிய மாட்டார். அப்படி இருக்கையில் தென்னிலங்கை சிங்களப் பேரினவாத மனப்பான்மையிடம் இருந்து நீதி கிடைக்கும் என எதிர்பார்ப்பது அர்த்தமேயற்றது. அது, மீண்டும் மீண்டும் 'பிரபாகரனிஸம்' என்ற கோட்பாட்டின் மூலம் மட்டுமே தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்தி நிற்கின்றது. அதுதான் வரலாறு நமக்குப் போதிக்கும் பாடம்.

திருகோணமலைச் சம்பவங்கள் மூலம் தலைவர் பிரபாகரனின் பாதையை தென்னிலங்கை மீண்டும் மீண்டும் நியாயப்படுத்திக் கொண்டு நிற்கின்றது என்பதுதான் நிஜம்.





# பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்க குறிஞ்சிச்சாரல் பெருவிழா மட்டக்களப்பில்!

**(வி,ரி,சகாதேவராஜா)**

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தினது குறிஞ்சிச்சாரல் நிகழ்வானது நெய்தல் காற்று நெகிழ்ந்தாடும் மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் கிழக்குப் பல்கலைக்கழ சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் பீடத்தில் இடம் பெற்றது.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரை முதற் பெருந்தலைவராகக் கொண்டு 99 வருடங்களைக் கடந்து 100 ஆவது வருடத்தை நோக்கி வீறு நடையிடும் தொன்மையும் பெருமையும் மிக்கதோர் மாபெரும் சங்கத்தின் தமிழுணர்வுப் பெருவிழா.

இந்த நிகழ்வானது பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத் தலைவர் மதுமிதனின் தலைமையிலும் பெருந்தலைவர் பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் மற்றும் பெரும்பொருளாளர் கலாநிதி எஸ். பாஸ்கரன் ஆகியோரின் வழிகாட்டுதலிலும் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக நாடகப் பெருந்தகை பேராசிரியர். சி. மௌன குரு தன்னுடைய கருத்துரைகளை வழங்கினார். சிறப்பு விருந்தினர்களாக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் பீடத்தின் இயக்குநர் பேராசிரியர் புளோரன்ஸ் கெனடி அம்மையார், கலைப்பீட நுண்கலைத்துறை, துறைத்தலைவர் திருமதி துஷ்யந்தி சத்தியஜித் அம்மையார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழில் செழும்பணியாற்றிய ஆளுமைகளுக்கு வழங்கி கௌரவிக்கப்படும் சங்கச்சான்றோர் விருதானது எழுத்தாளர் உமா வரதராஜனுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப் பீட மாணவர்கள் இன்னியம் இசைத்து வரவேற்றிட தமிழர்களின் தனித்துவமான வெற்றிலை வழங்கி வரவேற்கும் வழக்கத்துடன் விருந்தினர்கள் வரவேற்கப் பட்டனர்.

மங்கல விளக்கேற்றல் மற்றும் வரவேற்புரை மற்றும் தலைமையுரையோடு பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் வரவேற்பு நடனத்தினை வழங்கியிருந்தனர்.

தொடர்ந்து பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்களின் இறையிசைப் பாடல்கள் இடம்பெற்றன.

பேராதனைப்பல்கலைக்கழக தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஆன் யாழினி சதீஸ்வரனது நெறிப்படுத்துகையில் பெண்ணியம் செழித்திடும் பிச்சி நாடகமும் மேடையேற்றப்பட்டது.

அடுத்து " எங்கட கதை" எனும் தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களின் வில்லுப்பாட்டு மேடையேற்றப்பட்டது.

மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் கணினி விஞ்ஞானத்துறை துறைத் தலைவர் கலாநிதி தயாசிவம் உதயசங்கர் மக்கள் மன்றத்தைத் தலைமை தாங்கினார்.

இன்றைய இளைஞர்களின் மீதான குற்றச்சாட்டுக்கள் எதை அடிப்படையாக கொண்டது எனும் தொனிப்பொருளில் மக்கள் மன்றமானது அமைந்திருந்தது.

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தாக்ஷாயினி பரமதேவனின் நெறியாள்கையில் மட்டுமண் வாசம் மாறாத ஒய்யார ஒயிலாட்டமானது மேடையேற்றப்பட்டது.

மட்டக்களப்பு சிசிலியா பெண்கள் கல்லூரியின் அஷ்ட லட்சுமி நாட்டிய நாடக ணமும் இடம்பெற்றது.

சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் க.மோகனதாஸ் நெறியாள்கையில் "அகிலத்தின் திறலே தமிழணங்கு" என்ற தலைப்பில் மட்டு நகரின் தனிச்சிறப்புடைய கூத்துக்கலையானது மேடையேற்றப் பட்டது.

இறுதி நிகழ்வாகப் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களின் திரையிசைப் பாடல்களோடு குறிஞ்சிச்சாரல் நிகழ்வு நிறைவுபெற்றது.











# புல்மோட்டை கனிய மணல் கூட்டுத்தாபன ஊழியர்கள் கொட்டும் மழையிலும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

புல்மோட்டை கனிய மணல் கூட்டுத்தாபன ஊழியர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருகோணமலை – புல்மோட்டை கனிய மணல் கூட்டுத் தாபனத்தில் பணியாற்றிவரும் 83 ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து கொட்டும் மழைக்கு மத்தியிலும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ச்சியாக இன்று (18) 37 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுமார் 15 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாமையால் பொருளாதார ரீதியாக தங்களது குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள் ளன என்றும் பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் உரிய துறை சார் அமைச்சர் அதிகாரிகளுக்கு தெரிவித்தும் எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த தேர்தலின் போது தங்களுக்கு அநுர அரசு தீர்வுகளைப் பெற்று தரும் என்ற நம்பிக்கையில் வாக்களித்த போதிலும் தங்கள் பிரச்சினைகளைக் கண்டு கொள்ளாதது போல் இருப்பதாகவும் குறிப்பிடுகின்றனர்.

தங்களுக்கு சாதகமான தீர்வை பெற்றுத் தரக் கோரி சத்தியாக் கிரக போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---



# சம்மாந்துறை வைத்தியசாலைக்கு புதிய அபிவிருத்திக் குழு நியமனம்

## 20 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி வைப்பு

(றியாஸ்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் எதிர்கால மேம்பாடு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் நோக்குடன், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (17) வைத்தியசாலையின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

புதிய உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்களை நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா வழங்கி வைத்தார். கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

20 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவில் வைத்தியர்கள், கல்வியியலாளர்கள், உலமாக்கள், தொழிலதிபர்கள் உள்ளிட்ட பல துறைகளிலிருந்து முக்கியஸ் தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.



# கல்முனையில் குப்பைப் பிரச்சினைக்குத் தீர்வு; அடுத்த சில தினங்களில் நிலைமை வழமைக்கு!

## சிவில் அமைப்புகளுடன் ஆணையாளர் கலந்துரையாடல்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவையை வழமை போல முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக கல்முனை சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி கலந்துரையாடியுள்ளார்.

கல்முனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளரும் கல்முனை அபிவிருத்திக்கும் முகாமைத்துவத்திற்குமான சபையின் செயலாளருமான ஏ.எல்.ஏ. மஜீட் ஒருங்கிணைப்பில் திங்கட்கிழமை பிற்பகல் கல்முனை மாநகர சபையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது திண்மக்கழிவகற்றல் சேவையை முன்னெடுப்பதில் கல்முனை மாநகர சபை எதிர்நோக்கி வருகின்ற சவால்கள் குறித்து ஆணையாளர் தெளிவுபடுத்தினார்.

கல்முனை மாநகர சபையினால் அன்றாடம் சேகரிக்கப்படுகின்ற குப்பைகளை கொட்டுவதற்கு பொருத்தமான இடமொன்று இல்லாதிருப்பதே தற்போதைய நெருக்கடி நிலைக்கு பிரதான காரணம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக கடந்த சில காலமாக கல்முனை கிறீன் பீல்ட் பகுதி காணியில் குப்பைகள் கொட்டப்பட்டு வந்த நிலையில், அப்பகுதி பொதுமக்கள் சிலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் கடந்த சில வாரங்களாக அங்கு குப்பைகளைக் கொட்ட முடியாதிருக்கிறது.

அதனால் அட்டாளைச்சேனை பள்ளக்காட்டுக்கு கொண்டு சென்றே குப்பைகளை கொட்ட வேண்டியுள்ளது. இது பாரிய சவாலான விடயம். தூரப் பிரச்சினை ஒரு புறம், யானை அச்சுறுத்தல் இன்னொரு புறம். யானைகள் படையெடுப்பதால் நண்பகல் 12.00 மணிக்கு பின்னர் அங்கு போக முடியாதுள்ளது.

இந்நிலையில் ஒரு திண்மக் கழிவகற்றல் வாகனமானது ஒரு தடவை மாத்திரமே அங்கு போய் வர முடியுமாக இருக்கிறது. அதன் பின்னர் அன்றைய நாளில் இன்னொரு தடவை குப்பைகளை சேகரித்து, அங்கு கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.



இதனால்தான் நாளாந்தம் பெரும்பகுதி குப்பைகள் தேக்கமடைகின்றன.

ஆகையினால் அடிக்கடி எழுகின்ற இந்த நீண்ட காலப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக கல்முனை மாநகர சபை எல்லையினுள் குப்பை கொட்டுவதற்கென பிரதேச ரீதியாகவேனும் பொருத்தமான காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு, தயார்படுத்தப்பட வேண்டும்.

அதுவரை கிறீன் பீல்ட் பகுதி காணியிலேயே தற்காலிகமாக குப்பைகளை கொட்ட வேண்டியுள்ளது. தற்போது எழுந்துள்ள நெருக்கடி நிலையை முடிவுக்கு கொண்டு வந்து, இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு இதுவே உடனடித் தீர்வாகத் தென்படுகிறது.

இது குறித்து அப்பகுதி மக்களுடன் மேற்கொண்ட சமரச முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இந்தப் பிரச்சினை தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்வு கோரப்பட்டபோது குறித்த இடத்தை வழமை போன்று பாவிக்குமாறும் அதுவொரு அத்தியாவசிய சேவை என்பதால் எவரும் இடையூறு விளைவிக்க முடியாது என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டதாக ஆணையாளர் விவரித்தார்.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட பொது மக்களை விழிப்புணர்வூட்டி, அவர்களது இணக்கத்துடன் குறித்த இடத்தில் சிறிது காலத்திற்கு குப்பைகளைக் கொட்டுவதற்கு சிவில் சமூக அமைப்புகள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அந்த இடத்தில் குப்பை கொட்டுவதால் மக்களுக்கு ஏற்படுவதாகக் கூறப்படுகின்ற அசௌகரியங்களை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்ற உத்தரவாதத்தை வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது கல்முனை மாநகர திண்மக்கழிவகற்றல் பிரச்சினைக்கு நிரந்தர மற்றும் தற்காலிக தீர்வுகள் காண்பது தொடர்பில் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் பல்வேறு ஆலோசனைகளையும் கருத்துகளையும் முன்வைத்தமையுடன் இந்த விடயத்தில் மாநகர சபைக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவார்கள் எனவும் உறுதியளித்தனர்.

இதன் பிரகாரம் கிறீன் பீல்ட் மக்களுக்கு விடயத்தை தெளிவுபடுத்தி, அவர்களது இணக்கப்பாட்டுடன் அங்கு முன்னர் போன்று மீளவும் குப்பைகளை முறையாக கொட்டுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்றும் இக்கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனையன்ஸ் போரம், மனித வள அபிவிருத்தி அமைப்பு, கல்முனை அபிவிருத்திக்கும் முகாமைத்துவத்திற்குமான சபை, கல்முனை முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாசல், கல்முனை நகர ஜும்ஆப் பள்ளிவாசல், அன்சார் சுன்னத்வல் முஹம்மதியா ஜும்ஆப் பள்ளிவாசல், ஹுதா ஜும்ஆப் பள்ளிவாசல் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.



# புதிய வீடமைப்பு நீர் விநியோக அமைச்சர் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு விஜயம்

(அஷ்ரப் ஏ சமத் )

வீடமைப்பு ,நிர்மாண மற்றும் நீர் விநியோக வடிகாலமைப்பு அமைச்சர் சுசில் ரணசிங்க மற்றும் பிரதியமைச்சர் யு.பி.பி சரத் மற்றும் அமைச்சின் செயலாளர் உட்பட அதிகாரிகள் நேற்று (17) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகத்துக்கு விஜயம் செய்தனர்.

அத்துடன் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் அரவிந்த் சிறிநாத் தலைமையில் சபையின் அதிகாரிகள் மற்றும் 25 மாவட்டங்களின் மாவட்ட முகாமையாளர்கள் மட்டத்திலான கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின்போது அமைச்சர் நாடு முழுவதிலும் உள்ள மாவட்ட அலுவலகங்கள் ஊடாக மேற்கொள்ளும் புதிய வீடமைப்புத் திட்டங்கள் கடந்த காலத்தில் வீடமைப்பு அதிகார சபையால் நிர்மாணிக்கப்பட்டு கைவிடப்பட்ட வீடமைப்பு மாதிரிக் கிராமங்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் அமைச்சரால் வழங்கப்பட்டது.

அத்துடன் வீடமைப்பு அலுவலகங்களில் உள்ள ஊழியர்கள் பிரச்சினைகள், பதவியுயர்வுகள் தற்காலிகமாக 500 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் நிரந்தரமாக்கல் போன்ற விடயங்களும் அமைச்சருடன் கலந்துரையாடப்பட்டது.








# பகல் நேர பராமரிப்பு நிலையம் தொடர்பாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி நெறி

(ஹஸ்பர் ஏ.எச்.)

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பகல் நேர பராமரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு அமைவாக சமூக சேவைகள் திணைக்களத்தின் நேரடியான மேற்பார்வையின் கீழ் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நடுவூத்து கிராம சேவையாளர் பிரிவில் பகல் நேர பராமரிப்பு நிலையம் ஒன்று உருவாக்கப் படவுள்ளது.

குறித்த பகல் நேர பராமரிப்பு நிலையத்தில் ஆறு மாத தொடக்கம் 18 வயது வரையிலான மாற்றுத் திறனாளிகளை பராமரிப்பது தொடர்பான பயிற்சி நெறி கிண்ணியா பிரதேச செயலர் பிரிவில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சமூக சேவைகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளரின் வழிநடத்தலுக்கு அமைவாக நேற்று (15) கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கனி தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் உரையாற்றும் போது இது திருகோணமலை மாவட்டத்துக்குக் கிடைத்த மிகப்பெரிய சொத்து எனவும் இதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கி இந்தத் திட்டத்தில் மிகப்பெரிய ஒரு வளர்ச்சியை நாங்கள் அடைய வேண்டும் என்றும் கூறினார்.

பகல் நேர பராமரிப்பு நிலையத்தைத் திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவை தெரிவு செய்தமைக்கு சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

சமூக சேவைகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் உரையாற்றும் போது,

மாற்றுத்திறனாளி பிள்ளைகளை பராமரிப்பு தொடர்பாக ஏற்கனவே உங்களுக்குள்ள அனுபவங்களையும் அதில் இருக்கிற சில நுட்பமான விடயங்களையும் இன்று இற்றைப்படுத்திக் கொள்வதற்கு ஒரு சரியான சந்தர்ப்பம் இது. இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி மாற்றுத் திறனாளி பிள்ளைகளைச் சரியான முறையில் வளப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் வளவாளராக கலந்து கொண்ட சமூகநலன்புரி அத்தியட்சகரால் மாற்றுத்திறனாளி மாணவர்களை அவர்களின் வயதுக்கு ஏற்றவாறு எவ்வாறு பராமரிப்பது என்றும் பகல் நேர பராமரிப்பு நிலையத்தில் எவ்வாறான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மாணவர்களுடைய திறன்களை அடையாளம் காணலாம் என்பது தொடர்பான விரிவான விளக்கங்களும் வழங்கப்பட்டன.









# பாம்பனில் நாட்டுப்படகு மீனவரது வலையில் சிக்கிய 112 கிலோ எடை கொண்ட கேரை மீன்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன் பிடிக்க சென்ற பாம்பன் நாட்டுப்படகு மீனவர்கள் வலையில் 112 கிலோ எடை கொண்ட 'மெகா சைஸ்' மஞ்சள் வால் கேரை மீன் இன்று (18) அதிகாலை சிக்கி யதால் பாம்பன் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இராமநாதபுரம் மாவட் டம் இராமேஸ் வரத்தை அடுத்த பாம்பன் வடக்கு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நேற்று 50 இற்கும் அதிகமான நாட்டுப் படகுகள் நூற்றுக் கணக்கான மீனவர்கள் தென் கடல் பகுதியான மன்னார் வளைகுடா கடல் பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்றி ருந்தனர்.

தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்தம் உருவாகியுள்ளதால் கடல் வழக்கத்துக்கு மாறாக சற்றுச் சீற்றத்துடன் காணப்பட்டுவரும் நிலையில் கடல் நீரோட்டம் அதிகமாக இருப்பதால் மீன் பிடித்து கரை திரும்பிய மீனவர்கள் வலையில் உள்ளூர் சந்தையில் விற் பனை செய்யப்படும் நகரை, பாரை, நெத்திலி உள்ளிட்ட மீன்கள் அதே போல் கிளாத்தி, சீலா, மாவுலா, கிளி, பாறை, முண்டகண்ணி பாறை, கட்டா, சூவாரை உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு ஏற்று மதி செய்யப்படும் மீன்கள் வரத்து எதிர் பார்த்த அளவை விட அதிகளவு கிடைத் ததால் மீனவர்கள் மகிழ்ச்சியுடன் கரை திரும்பினர்.

இந்த நிலையில் பாம்பன் அந்தோனி யார்புரம் பகுதியை சேர்ந்த கிளிண்டன் என்பவருக்கு சொந்தமான வலையில் சுமார் 3 மீற்றர் நீளம் கொண்ட 115 கிலோ எடை கொண்ட மஞ்சள் வால் கேரை மீன் என்றழைக்கப்படும் அம்பர்ஜாக் மீன் ஒன்று சிக்கியது.

பாம்பன் நாட்டுப்படகு மீனவர் வலை யில் சிக்கிய 112 கிலோ எடை கொண்ட மஞ்சள் வால் கேரை மீனை, கேரளா மீன் வியாபாரி ஒருவர் கிலோ 150 ரூபா வீதம் 17 ஆயிரம் ரூபா கொடுத்து வாங்கிச் சென்றுள்ளார். ஒற்றை மீன் 17 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனையானது. இதனால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மஞ்சள் வால் கேரை மீனுக்கு கேரள மாநில அசைவ பிரியர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. இந்த மீனை அரை கிலோ, ஒரு கிலோ என வெட்டி எடை போட்டு விற்பனை செய்து விடுவேன் என கேரள வியாபாரி தெரிவித்தார்.

வால் பகுதியில் மஞ்சள் நிறத்தில் தட்டையான கத்தி போன்ற அமைப்பு காணப்படும். அவை வேகமாக இடப் பெயர்ச்சி செய்யக்கூடியவை.

இந்தவகை மீன், அட்லாண்டிக், பசிபிக் மற்றும் இந்திய பெருங்கடலில் ஆழமான பகுதியில் வாழக்கூடியது. வழக்கமாக 3 மீற்ற நீளம், மற்றும் அதிகபட்சம் 4.55 மீற்ற நீளம் மற்றும் 550 கிலோ எடை வரை வளரக் கூடியது என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.





# சரக்கு ரயில் தடம் புரண்டதால் மலையக ரயில் சேவை பாதிப்பு

**(க.கிஷாந்தன்)**

சரக்கு ரயில் தடம் புரண்டதால் மலையக ரயில் மார்க்கத்தில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 11:30 மணியளவில் கண்டியிலிருந்து பதுளைக்கு பொருள் களை ஏற்றிச் சென்ற சரக்கு ரயில் ஓஹியா ரயில் நிலையம் அருகே தடம் புரண்டதால் மலையக ரயில் மார்க்கத்தி லான சேவைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ரயிலின் ஒரு சரக்கு பெட்டி தடம் புரண் டதால், கொழும்பு - கோட்டை - பதுளை இடையிலான பயணிகள் ரயில்கள் பாதிக்கப்படாமல், மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ரயில்வே அதிகாரிகள், பாதிக்கப்பட்ட பகுதியில் உடனடியாக செயல்பட்டு, ரயில் பாதை சரி செய்யும்வரை பயணிகள் மற்றும் சரக்கு ரயில்களின் பாதுகாப்பை யும் செயல்திறனையும் உறுதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கோரிக்கை

(கே. எ. ஹமீட் )

நமது நாட்டின் அரசியல் வரலாற்றை நோக்கும் போது தமிழ் பேசும் மக்களின் பெரும் ஆதரவுடன் 1994 இல் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட திருமதி சந்திரிக்கா இனப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவார் என்று தமிழ் பேசும் சமூகம் எதிர்பார்த்தது.

இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான முன்மொழிவுகளைப் பெருந்தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் நாடாமன்றத்தில் முன்வைத்தபோது அதற்கு நாடாளுமன்றத்தில் எதிர்ப்புத் தெரிவித்தனர். சந்திரிக்கா 2 தடவைகள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட போதும் இனப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2 தடவைகள் ஜனாதிபதியாக இருந்தார். யுத்தத்தை இல்லாமல் செய்தார், பல வரலாற்று அபிவிருத்திகளை செய்தார். ஆனால் இனப் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை. மஹிந்த ராஜபக்ஷ இன பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டிருந்தால் இஸ்லாமிய நாடுகளின் மன்னர்கள் போன்று மஹிந்த மரணிக்கும் வரை ஜனாதிபதியாக இருந்திருப்பார்.

தமிழ் பேசும் மக்களின் பெரும் ஆதரவுடன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேன நல்லாட்சி அரசால் இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார் என்று தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் எந்த விதமான செயற்பாடுகளும் முன்னெடுக்காமல் மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் முடிவு பெற்றது.

அதனை அடுத்து இனவாதத்தை மூலதனமாகப் பாவித்து ஆட்சிக்கு வந்த கோட்டபய ராஜபக்ஷ தனது காலம் முடிவதற்குள் நாட்டை விட்டுத் தப்பி ஓடும் நிலைமை உருவானது. தற்காலிகமாக ஜனாதிபதி பதவிக்கு நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்ரமசிங்க இனப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம் எனக் கூறிவிட்டு அவரும் தோல்வி அடைந்து விட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு பெரும்பான்மை மக்களின் ஆணையும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையும் கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு 03 ஆவது வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை மாற்றுதல், 13 ஆவது சரத்தை முழுமையாக அமுல்படுத்துதல் மற்றும் மின்சார கட்டணத்தை 33 வீதம் குறைப்



போம் என்ற வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளில் ஜனாதிபதி ஈடுபட வேண்டும். அரசுக்கு பெரும்பான்மையான முஸ்லிம் மக்கள் வாக்களித்துள்ளனர். பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்காமல் விட்டதால் அப்பாவியான ருஷ்தி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். அன்று அப்பாவியான ருஷ்டியை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கையொப்பமிட்டு முஸ்லிம்களின் பெரும் வெறுப்பை சம்பாதித்தீர்கள்.

கோட்டபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்களின் புனித அல்–குர்ஆன் இலங்கை சுங்கத் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டது. முஸ்லிம்களை பழிவாங்கும் நோக்குடன் முஸ்லிம் உலமாக்களை பயமுறுத்திய நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்த மனித சமூகத்துக்கு இறக்கி வைக்கப்பட்ட புனித அல்–குர்ஆனின் புனிதத்துவம் கெடும் வகையில் அடிக் குறிப்பு இடப்படுவதையோ அல்லது ஒரு பயங்கரமான பண்டமாக ஒதுக்கி வைப்பதையோ நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

இது ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறல் செயலாகும். கட்சி பேதமின்றி ஆளும் கட்சி மற்றும் எதிர்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 22 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டு சமய விவகார அமைச்சர் அவர்களுக்கு வழங்கிய மனு தொடர்பாக அரசு தரப்பில் இருந்து சாதகமான பதில் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

இதனை முஸ்லிம் சமூகம் மிகவும் மன வேதனையுடன் நோக்குகிறது. குறித்த மனுவை ஜனாதிபதியின் கவனத்துக்கு நான் இந்தச் சபையில் மேலும் சமர்ப்பிக்கின்றேன்.

இன ஒற்றுமை, சமூக நீதி, தேசிய ஒருமைப்பாடு பற்றி கதைக்கும் ஜனாதிபதி இந்த அல்–குர்ஆன் விடயத்தில் நியாயமான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கின்றனர்.

கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்ட கல்வி மறுசீரமைப்புக் குழுவில் முஸ்லிம் ஒருவரை நியமனம் செய்யுமாறு கோரிக்கை விடுத்த போதும் இதுவரையும் இக்குழுவில் முஸ்லிம் ஒருவர் நியமனம் செய்யப்படாத நிலைமை தொடர்கிறது. அண்மையில் கலாசார அமைச்சால் நியமிக்கப்பட்ட 19 தொல்பொருளியல் ஆலோசனைக் குழுவில் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் பிரதிநிதிகள் இல்லாத நிலைமையில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்களில் தேசிய நல்லிணக்க அமைச்சு ஈடுபட்டு சகல இனங்கள் மத்தியில் சமத்துவம் பேணப்படும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டிய பாரிய பொறுப்பு தேசிய நல்லிணக்க அமைச்சுக்கு உள்ளது என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

தேசிய நல்லிணக்க அமைச்சொன்று செயற்பட்டு வருகின்றது. இந்த அமைச்சினூடாக எமது நாட்டின் தேசிய நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அண்மையில் நடைபெற்ற தேசிய நல்லிணக்க அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் நமது நாட்டில் அமுல்படுத்தப்படும் கிளீன் ஸ்ரீலங்கா திட்ட ஆலோசனைக் குழுவில் முஸ்லிம் ஒருவரை ஏன் நியமனம் செய்யவில்லை எனக் கேட்டேன். நீதி அமைச்சர் இது தொடர்பாக பிரதி அமைச்சர் முலப்பர் மௌலவி பதிலளிப்பார் என தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் முலப்பர் மௌலவி கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் எங்களின் அமைச்சு ஊடாக முன்னெடுக்கப்படவில்லை. அது ஜனாதிபதியும், ஜனாதிபதி செயலகமும் முன்னெடுத்து வருவதாக பிரதி அமைச்சர் பதிலளித்தார். நான் சொன்னேன் தேசிய நல்லிணக்க அமைச்சின் செயற்பாடுகள் ஜனாதிபதி, பிரதமமந்திரி, அமைச்சுகள் கவனம் எடுத்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று. இதுவரையும் கிளீன் ஸ்ரீலங்கா ஆலோசனைக் குழுவில் ஒரு முஸ்லிம் கூட இணைத்துக் கொள்ளாத நிலைமை தொடர்கிறது.

1996 ஆம் ஆண்டு யாழ் மண்ணில் அரங்கேறிய சூரியக்கதிர் நடவடிக்கைகளின் போது செம்மணி புதைகுழி, கிரிசாந்தி என புதைகுழிகள் தோண்டுமாறு அழைக்கப்பட்ட 08 நீதிபதிகள் வழக்கை விசாரணை செய்ய மறுத்தபோது 09 ஆவது நீதிபதியாக களத்தில் இறங்கிய நீதிபதி இளஞ்செழியன், தனக்கு பதவி உயர்வு வழங்காமல் இந்த அரசு அநீதி இளைத்துள்ளது என்று அவரே மனம் நொந்த நிலையில் அண்மையில் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வு நமது நாட்டில் நீதியையும், சட்டத்தையும் மதித்து நாட்டுப்பற்றுடன் நீதித்துறையில் செயற்படுபவர்களுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. நீதிச் சேவையில் இருந்து நான் ஒரு போதும் விரும்பி ஓய்வு பெறவில்லை என்றும் கட்டாயப்படுத்தி ஓய்வு பெறப்பட்டேன் எனவும் மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும், முன்னாள் நீதிபதியுமான மாணிக்கவாசகம் இளஞ்செழியன் பகிரங்கமாக தெரிவித்துள்ளார். எனவே, நீதித்துறை சுதந்திரமான முறையில் இயங்க வேண்டும். ஏற்கனவே நீதியரசர்கள் லபார், நவாஸ் ஆகியோருக்கும் நீதித்துறையில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.– என்றார்.



# தேசிய மக்கள் சக்தி அரசின் எழுச்சியும் பொறுப்புக் கூறலும்!

இலங்கை அரசியல் வரலாற்றில் பாரம்பரிய கட்சிகளின் ஆதிக்கத்தை இடைநிறுத்திப் புதிய அரசியல் கலாசாரமாக மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட அநுர குமார திஸாநாயக்க, கடந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாக பதவியேற்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள் மாறி மாறி ஆட்சி செய்த நிலையில், புதிய அரசியல் சக்தியாக தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாகும்.

அரசாங்கம் ஊழல், மோசடி, வீண்விரயம் ஆகியவற்றை ஒழித்து, நாட்டை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்லும் உறுதிமொழியுடன் ஆட்சியை ஏற்றது.

அந்த வகையில் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் நீக்கம் அரசியலமைப்பில் வழங்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் (அதிகாரபூர்வ வீடுகள், ஓய்வூதியம், பாதுகாப்பு, வாகனம்) புதிய சட்டமூலத்தின் மூலம் நீக்கப்பட்டது. இது தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாகும், மற்றும் அது நிறைவேற்றப்பட்ட முக்கிய வாக்குறுதி எனக் கூறலாம். இது அரச நிதி வீண்விரயத்தை குறைப்பதற்கான நடவடிக்கையாகவும், அரசியல் பதவியின் அதிகாரத்தைக் குறைக்கும் சீர்திருத்தம், மக்கள் முன்னிலையில் நம்பிக்கையை உருவாக்கும் சின்னமாகவும் அமைந்தது. இத்தகைய நடவடிக்கை இலங்கை வரலாற்றில் முதன்முறையாக எடுக்கப்பட்டது என்பதாலும், அரசாங்கத்துக்கு அரசியல் மதிப்பைப் பெருக்கியது.

ஊழல், மோசடி விசாரணைகள் மற்றும் கைது நடவடிக்கைகளை அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், ஊழலை ஒழிக்கும் உறுதியுடன் விசாரணைகளை ஆரம்பித்தது. இதன் போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் அமைச்சர்கள் மஹிந்தானந்த அளுத்கமகே, ராஜித்த சேனாரத்ன, ஷஷிந்திர ராஜபக்ஷ ஆகியோர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

மேலும் போதைப்பொருள் ஒழிப்பு முயற்சிகளைத் தேசிய மக்கள் சக்தி அரசு “போதைப்பொருள் இல்லா இலங்கை” என்ற இலக்கை நோக்கி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கடல் வழியாகவும் விமான வழியாகவும் உள்நாட்டுக்குள் புகும் போதைப்பொருள் கடத்தல்களை தடுக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டன. இந்தோனேசியாவில் இருந்து முக்கிய போதைப் பொருள் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டனர். “ஐஸ்” போதைப்பொருள் தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட இரசாயன பொருட்கள் நூற்றுக்கணக்கான கிலோகிராம்கள் அளவில் மீட்கப்பட்டன. போதைப் பொருள் வழக்குகள் தொடர்பாக கடந்த 12 மாதங்களில் 16,000 இற்கும் மேற்பட்ட கைதுகள் இடம்பெற்றுள்ளன என்று அரசு அறிக்கைகள் தெரிவிக்கின்றன

**பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்குதல்**

தேசிய மக்கள் சக்தியின் கொள்கை பிரகடனத்தில் பிரதான உறுதிமொழியாக காணப்பட்டது. இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு தமிழர்கள் தொடர்ச்சியாக முன்வைத்து வரும் கோரிக்கையானது, தேசிய மக்கள் சக்தியின் கொள்கை பிரகடனத்தில் பிரதான உறுதிமொழியாக காணப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக வேறொரு சட்டத்தை கொண்டு வரும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக அறிவித்திருந்த போதிலும், கடந்த ஒரு வருட காலத்தில் அந்த உறுதிமொழியும் நிறைவேற்றப்படவில்லை.பிரதான உறுதிமொழிகள் உள்ளடங்கலாக மேலும் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழர்களின் காணி விடுவிப்பு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் யுத்த காலத்தில் பாதுகாப்பு தரப்பினரால் கைப்பற்றப்பட்ட காணிகள் முழுமையாக விடுவிக்கப்படும் என தேசிய மக்கள் சக்தி உறுதிமொழி வழங்கியிருந்தது. எனினும், அந்த உறுதிமொழியும் இதுவரை முழுமை பெறாதுள்ளது. சில பகுதிகளில் காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும், முழுமையாக காணிகள் இன்று வரை விடுவிக்கப்படவில்லை.

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை**

யுத்த காலத்தில் கைது செய்யப்பட்டு, இன்று வரை எந்தவித விசாரணைகளும் இன்றி தடுத்து வைக்கப்பட்டு தமிழ் அரசியல் கைதிகள்

தொடர்ச்சி ▼

# தேசிய மக்கள் சக்தி அரசின் எழுச்சியும் பொறுப்புக் கூறலும்!

**தொடர்ச்சி▲**

முழுமையாக விடுவிக்கப்படாத நிலையில், அவர்களின் விடுதலைக்கான தொடர்ந்தும் தமிழர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். உள்நாட்டுப் போர் காலத்தில், பல்வேறு தமிழ் இளைஞர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் பலர், தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லது அதனுடன் தொடர்புடையதாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களாகக் கருதப்பட்டனர். போர் முடிந்து பல ஆண்டுகள் கடந்தும், இந்த கைதிகளில் பலர் இன்னும் நீதிமன்ற விசாரணை இன்றி சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலர், சாட்சிகள் இல்லாமை, வழக்கு ஆவணங்கள் காணாமை, சட்டரீதியான தாமதங்கள் போன்ற காரணங்களால் பல ஆண்டுகளாக முன்னோக்கி செல்லாத வழக்குகளில் சிக்கியுள்ளனர்.

### பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு பெற்றுத் தரப்படும் என்ற உறுதிமொழி தேசிய மக்கள் சக்தியினால் முன்வைக்கப்பட்ட போதிலும், அது தொடர்பிலான இறுதி முடிவு இன்று வரை எட்டப்படாதுள்ளமையை காண முடிகின்றது. பெருந்தோட்ட பகுதிகளில் வாழும் தமிழ் மக்களை மலையக தமிழர்கள் என ஏற்றுக்கொள்ளும் உறுதிமொழியும் இன்று வரை நிறைவேற்றப்படவில்லை. அத்துடன், லய அறைகளில் வசிக்கும் மலையக தமிழர்களுக்கு நிரந்தர வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கான காணிகள் இதுவரை முழுமையாக வழங்கப்படவில்லை. இவ்வாறு தேர்தல் மேடைகளிலும், கொள்கை பிரகடனத்திலும் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் முழுமையாக ஒரு வருட காலத்திற்கு நிறைவேற்றப்படவில்லை. எனினும், தேசிய மக்கள் சக்தியினால் வழங்கப்பட்ட சில உறுதிமொழிகளுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

“பொதுவாக இலங்கை மக்களுக்கு என்று ஒரு எதிர்பார்ப்பு இருக்கும். அது சிங்களமாக இருக்கலாம், தமிழர்களாக இருக்கலாம். இவர்களிடம் பொதுவான ஒரு எதிர்பார்ப்பு இருக்கும். ஊழல், மோசடிகளை இல்லாது செய்வோம். போதைப் பொருள்களை இல்லாது செய்வோம்.”

இந்த மாதிரியான சில பொதுவான கோரிக்கைகள் வெளிவந்தன. இந்த விடயங்களில் இந்த அரசாங்கம் ஓரளவு முன்னோக்கி செல்வதாக தெரிகின்றது. ஆனால், தமிழர்களின் கோரிக்கை என்று பார்த்தால், ஈழத் தமிழர் பிரச்னையாக இருக்கலாம். அரசியல்தீர்வு விடயமாக இருக்கலாம். கடந்த கால குற்றச்சாட்டுக்கள் மீதான தீர்வாக இருக்கலாம். இந்த மாதிரியாக விடயங்களில் இந்த அரசாங்கம் ஒரு அடியேனும் முன்நோக்கி வைத்ததாக வெளிப்படையாக தெரியவில்லை. அரசியல் தீர்வு, போர் குற்றச்சாட்டுக்கள், காணாமல் போனோர் விடயங்கள், வடக்கு கிழக்கு பொருளாதாரம், மலையக தமிழ் மக்களின் சம்பள பிரச்சினையாக இருக்கலாம். இந்த விடயங்களில் இந்த அரசாங்கம் நழுவி செல்லும் போக்கை கடைபிடித்து செல்வது தெட்ட தெளிவாகவே தெரிகின்றது.

கடந்த அரசாங்கங்கள் செய்த அதேவேலைத் திட்டங்களை இந்த அரசாங்கம் தொடர்வதாக கூட இருக்கலாம். அரசாங்கத்தால் வெளியிடப்படுகின்ற அறிவிப்புக்களின் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு இல்லை என்பதே உண்மை.”

### எதிர்கட்சிகள் ஒன்றிணைவு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்டு அடுத்த நொடியே, பிரதான எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் ஒன்றிணைந்து ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவாக குரல் கொடுத்திருந்தனர். அத்துடன், ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிளவுப்பட்டு, தற்போது பிரதான எதிர்க்கட்சியாக விளங்குகின்ற ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அந்த கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ள ஏனைய கட்சிகளும் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவாக குரல் வழங்க முன்வைத்திருந்தனர். ரணில் விக்ரமசிங்கவின் விடுதலை மற்றும் அரசாங்கத்திற்கு செயற்பாடுகளுக்கு எதிராகவே தாம் ஒன்றிணைந்ததாக கூறிய பிரதான எதிர்கட்சிகள், இன்று ஒன்றிணைந்து பயணிக்கும் நோக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த சம்மேளனத்தில் என்றும் இல்லாதவாறு இம்முறை பிரதான எதிர்கட்சிகள் அனைத்தும் ஒரு மேடையில் ஒன்று கூடியிருந்தனர். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் முற்போக்கு கூட்டணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட பிரதான கட்சிகள் அனைத்தும் ஒரு மேடையில் அமர்ந்து, அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்துள்ளன.

எவ்வாறாக இருப்பினும் இலங்கையின் அரசியல் மாற்றத்துக்கு அமைவாக அரசியல் வாக்குறுதிகளுக்கு முழுமையான தீர்வுகள் கிடைக்க வேண்டும் என்பது மக்களுடைய போராட்டமாகக் காணப்படுகிறது.

**நாகராசா தனுஸ்காந்,**
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# சைபர் நெருக்கடியில் பெண்கள்...!



இலங்கை ஒரு டிஜிட்டல் யுகத்தின் வாசலில் தான் நிற்கின்றது. அரசாங்கத்தின் ஸ்மார்ட் தேச கனவுகள் ஒருபுறம் இருக்க அலை அலையாகப் பெருகிவரும் இணையவழித் தாக்குதல்கள் நாட்டின் டிஜிட்டல் அடித் தளத்தின் மீது கடுமையான நிழலை பரப்புகிறது.

அண்மையில் நாட்டின் முக்கிய அரச தரவு மையங்கள் தொடக்கம் பொது மக்களின் தனிப்பட்ட நிதித் தகவல்கள் வரையும் அத்தோடு அரசின் மிக முக்கியத் தரவுகளையே கேள்விக்குறியாக்கக் கூடிய சமீபத்திய தாக்குதல்கள், தேசிய பாதுகாப்புக்கு மட்டுமல்லாமல் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் விடுக்கப்பட்டுள்ள ஒரு நேரடியான சவாலாக உருவெடுத்துள்ளது.

இவ்வாறான இணையவழியிலான தாக்குதல் அனைவருக்கும் இடம் பெற்றாலும் அதிகளவில் பெண்களை மையமாகக் கொண்டே இடம்பெறுகிறது.

இலங்கையில் 2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப் பகுதிக்குள் இணையவழி குற்றங்கள் தொடர்பில் 5,400 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

எத்தனையோ வசதிகயை வழங்கி வருகின்ற இணையம் பெண்களுக்குப் பாதுகாப்பற்ற இடமாகவே காணப்படுகிறது. பாரம்பரியமான வன்முறைகள் போன்று இணையவழித் தாக்குதல்களும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையாகவே பெண்களை இலக்கு வைக்கின்றன. சமூகத் தளங்களில் அதிக ஈடுபாடு காட்டும் பெண்கள், பொதுவெளியில் இயங்கும் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் போன்றோர் குறிவைக்கப்பட்டு அவர்களின் அடிப்படை உரிமைகளும் இணையச் சுதந்திரமும் முடக்கப்படுகின்ற தன்மையே காணப்படுகிறது. அவற்றிலும் குறிப்பாக தேர்தல் காலப் பகுதிகளிலேயே பெண் வேட்பாளர்களை அதிகம் குறிவைத்து தாக்கப்படுகின்ற தன்மை காணப்படுகிறது.

பெண்களின் தனிப்பட்ட புகைப்படங்கள் அல்லது வீடியோக்களை பாதிக்கப்பட்டவரின் அனுமதியின்றி இணையத்தில் பரப்புவது மற்றும் பதிவேற்றுவது. சமூக ஊடகங்களில் தனிப்பட்ட தாக்குதல், அச்சுறுத்தல், அவதூறான கருத்துகளைப் பரப்புதல் மற்றும் கேலிக்குள்ளாக்கப்படுவது போலிக் கணக்குகளை உருவாக்குவதன் மூலம் தவறான தகவல், ஆபாசமான உள்ளடக்கங்களைப் பகிர்வது, தனிப்பட்ட முகவரி, தொலைபேசி எண் போன்ற தகவல்களை இணையத்தில் பதிவேற்றி அச்சுறுத்துவது ஒன்லைன் மூலம் இலகுவில் பாதிப்படையக் கூடிய பெண்களை குறிவைப்பது மற்றும் அவர்களின் நிதித் தகவல்களைத் திருடுவது போன்றவற்றால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்ற தன்மை காணப்படுகிறது.

இதனால் அவமானப்படுத்தப்பட்டு மனச்சோர்வும் பயமும் பொது வெளியிலும் மக்களுடம் இருந்து ஒதுங்கியிருக்கும் தன்மையும் காணப்படுகிறது. அத்தோடு வன்முறைக்கு இலக்கான பெண்களைச் சமூகம் குற்றம் சாட்டுவது, பாதிக்கப்பட்டவர்கள் சட்ட உதவியை நாடுவதிலிருந்து அவர்களின் மனதை மாற்றி பின்வாங்க வைப்பது போன்றவற்றினை எதிர் கொள்கிறார்கள்.

அதுமட்டுமல்லாது குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் சைபர் குற்ற விசாரணைப் பிரிவு இருந்தபோதிலும் கூட நீதி கிடைப்பதில் உள்ள தாமதம் ஏற்படுவதால் அவை தொடர்ந்து கொண்டு செல்கின்ற போக்கு காணப்படுகிறது. தாக்குதல்கள் ஏற்பட்டதற்கான ஆதாரங்களை சேகரிக்கும் முறை கடினமாக காணப்படுவதால் குற்றத்தை நிரூபிப்பதில் சிரம நிலை ஏற்படுகிறது.

இதனால் இணையப் பாவனையைச் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துவதற்கான பெண்களின் அடிப்படை உரிமைகள் முற்றுமுழுதாக மீறப்படுகின்ற சந்தர்ப்பமும் காணப்படுகிறது.

சைபர் குற்ற புலனாய்வு பிரிவானது போலியான கடித மோசடிகள் குறித்து எச்சரிக்கை விடுக்கும் பணியிலும் ஈடுபடுகிறது. தேசிய சைபர் பாதுகாப்பு மையமானது அச்சுறுத்தல்களில் இருந்து நாட்டைப் பாதுகாப்போடு சைபர் சம்பவங்களுக்குப் பதிலளிக்கும் ஒரு உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட மையமாக இது செயற்படுகிறது.


அதுமட்டுமன்றி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சைபர் குற்றப் பிரிவானது குழந்தைகளை மையமாகக் கொண்ட இணையக் குற்றங்களைத் தடுப்பதில் கவனம் செலுத்துகிறது. சிறுவர்களுக்கு எதிரான ஆபாச வெளியீடுகளைத் தடுப்பது இதன் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

மற்றும் கணினி குற்றச் சட்டமானது இலங்கையில் கணினி குற்றங்களை அடையாளம் கண்டு அவற்றை விசாரிப்பதற்கும் தடுப்பதற்கும் இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. அத்தோடு சம்பவ அறிக்கையானது சைபர் குற்றச் சம்பவங்களைப் புகாரளிக்க, ஞசை டுயமெய ஊநுசுவு போன்ற அமைப்புகளின் இணையதளங்களை அணுகலாம். மேலும் ஞயகந ஞளைவநசளீசழதநஉவ இன் ஊடாக பெண்கள், சிறுமிகள் மற்றும் பெண் செயற்பாட்டாளர்கள் பாதுகாப்பான இணையப் பாவனையைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. இதனூடாக பிரச்சினைகளை வெளிப்படுத்தித் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

இவற்றிலிருந்து இருந்து பெண்களைப் பாதுகாக்க சட்ட அமுலாக்கத்தை விரைவுபடுத்துவதும் டிஜிட்டல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வைப் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மட்டங்களில் கட்டாயமாக்குவதும் மிக அவசியமானதாக உள்ளது.

இலங்கையில் டிஜிட்டல் மாற்றத்தை நோக்கிய பயணத்தில் வெற்றிபெற வேண்டுமானால் இந்த அச்சுறுத்தல்களுக்கு வெறும் பதில்களை அளிப்பது போதுமானதாக காணப்படாது முன்கூட்டிய பாதுகாப்புச் சூழலை உருவாக்குவதே காலத்தின் கட்டாயமாகிறது சைபர் பாதுகாப்பில் முதலீடு செய்வது என்பது, ஒரு செலவு அல்ல ஸ்மார்ட் தேசத்தைக் கட்டமைப்பதற்கான அவசியமான முதலீடாக காணப்படுகிறது. இணையம் எந்தளவு நன்மை அளிக்கிறதோ அதே அளவுக்கு பயத்துடனும் வாழ வைக்கிறது.

**ஜனுக்ஷி ஸ்ரீகாந்தன்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**




# ‘ஒபரேஷன் சிந்தூர்’ வெறும் முன்னோட்டம்தான்!

## இந்திய இராணுவத் தளபதி பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை

டில்லியில் கார் குண்டுவெடிப்பு தாக்குதல் நடந்த நிலையில், ஒபரேஷன் சிந்தூர் வெறும் முன்னோட்டம்தான் என்று இராணுவ தளபதி உபேந்திர திவேதி பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி டில்லி செங்கோட்டை அருகே கார் குண்டு வெடித்ததில் 13 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தானைச் சேர்ந்த ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத அமைப்பு இருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது

குறிப்பாக வைத்தியர்களை மூளைச் சலவை செய்து இந்த சதித் திட்டத்தை தீட்டியிருப்பதும் தெரியவந்துள்ளது. எனினும், முன்கூட்டியே சோதனை நடத்தப்பட்டு பலர் கைது செய்யப்பட்டதால் பெரிய அளவிலான தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

இந்நிலையில், டில்லியில் நேற்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் இராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி உரையாற்றுகையில்,

“ஒரு நாட்டின் அரசு தீவிரவாதத்தை ஊக்குவித்தால் அது இந்தியாவுக்கு கவலை அளிக்கும் விஷயமாக மாறும். வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம். இதில் யாராவது தடைகளை ஏற்படுத்தினால் அவர்களுக்கு எதிராக சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டி இருக்கும்.

இயல்புநிலை பற்றி பேசும்போது, தீவிரவாதமும் பேச்சுவார்த்தையும் ஒன்றாக செல்ல முடியாது. அமைதியான செயல்முறையை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று நாங்கள் சொல்கிறோம். அதற்கு நாங்கள் ஒத்துழைப்போம். அதுவரை தீவிரவாதிகளையும் அவர்களின் ஆதரவாளர்களையும் ஒரே மாதிரியாகத்தான் நடத்துவோம்.

தீவிரவாதிகளை ஊக்குவிப்போருக்கு நாங்கள் பதிலடி கொடுப்போம். இன்று இந்தியா எந்த ஒரு மிரட்டலுக்கும் பயப்படாத நிலையில் உள்ளது. ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கை வெறும் முன்னோட்டம்தான். அது 88 மணி நேரத்தில் முடிந்துவிட்டது. எதிர்காலத்தில் எந்த சூழ்நிலைக்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். பாகிஸ்தான் ஒரு வாய்ப்பு கொடுத்தால், பக்கத்து நாட்டிடம் எவ்வாறு பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை கற்றுக் கொடுக்க தயாராக இருக்கிறோம்.” என்று தெரிவித்துள்ளார்.



# டில்லி தற்கொலைக் குண்டுத் தாக்குதல் வழக்கில் மருத்துவர் ஷாகின் சயீத்தின் தொலைபேசி ஆய்வு

டில்லி கார் குண்டு தற்கொலை தாக்குதல் வழக்கில் மருத்துவர் ஷாகின் சயீதின் கையடக்கத்தொலைபேசி ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளது.

காஷ்மீரைச் சேர்ந்த மருத்துவர் உமர் முகமது கடந்த வாரம் காரை வெடிபொருள்களுடன் செலுத்தி சென்று டில்லி செங்கோட்டை பகுதியில் வெடிக்கச் செய்து தற்கொலைத் தாக்குதல் நடத்தினார். இதில், 13 பேர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலின் பின்னணியில் முக்கிய குற்றவாளியாக சந்தேகிக்கப்பட்ட மருத்துவர் ஷாகின் சயீத் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் பாகிஸ்தானைச் சேர்ந்த ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத அமைப்பின் பெண்கள் பிரிவின் தலைவராக இந்தியாவில் செயல்பட்டமை தெரிய வந்தது.

இதையடுத்து, அவரது கையடக்கத் தொலைபேசியை ஆராய்ந்ததில் வாட்ஸ் அப் தகவல்கள் அழிக்கப்பட்டிருந்தன. அது மீட்டெடுக்கப்பட்டு 'மேடம் எக்ஸ், மேடம் இசட்' என்ற இரண்டு பெண்களிடம் ஷாகின் தொடர்ச்சியாக பேசி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களுக்கு இடையில் குறியீட்டு சொற்களின் வழியாக தீவிரவாத தகவல்களை பரிமாறி வந்துள்ளனர். மருத்துவர் ஷாகினை 'மேடம் சர்ஜன்' என்று அவர்கள் அழைத்துள்ளனர்.

'மேடம் எக்ஸ்', 'மேடம் இசட்' ஆகிய இரண்டு எண்களிடமிருந்து ஷாகினுக்கு தொடர்ச்சியாக அழைப்பு மற்றும் செய்திகள் வந்துள்ளன. அதில், 'மெடிசின்' என்ற வார்த்தையை அடிக்கடி சாட் செய்துள்ளனர். இது, வெடிமருந்தை குறிக்கும் குறியீட்டு சொல்லாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேடம் எக்ஸ், ஷாகினுக்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில், "ஒபரேஷனுக்கு மருந்து பற்றாக்குறை இருக்கக்கூடாது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில், ஒபரேஷன் என்ற சொல் தீவிரவாத தாக்குதலின் குறியீட்டு சொல்லாக பயன்படுத்தப்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

மேலும், மேடம் இசட் அனுப்பிய மற்றொரு செய்தியில், "மேடம் சர்ஜன், தயவு செய்து ஆபரேஷன் ஹாம்டார்டில் அதிக கவனம் செலுத்துங்கள்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக ஒபரேஷன் ஹாம்டார்ட் என்ற சொல் அவர்களது இயக்கத்துக்கு பெண் தீவிரவாதிகளை சேர்ப்பதை குறிக்கிறது என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# தமிழகத்தில் 23ஆம் திகதி வரை மழை; வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

வங்கக் கடலில் நவம்பர் 22 ஆம் திகதி புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகும் நிலையில், தமிழகத்தில் இன்று முதல் 23 ஆம் திகதி வரை சில மாவட்டங்களில் கனமழை நீடிக்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகள் மற்றும் அதையொட்டிய இலங்கை கடலோரப் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி நிலவுகிறது. இது இன்று மேற்கு அல்லது வடமேற்கு திசையில் மெதுவாக நகரக்கூடும்.

மேலும், எதிர்வரும் 22 ஆம் திகதி தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக்கூடும். இது, அடுத்த 48 மணிநேரத்தில் மேற்கு அல்லது வடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுப்பெறக் கூடும். இதன் காரணமாக தமிழகத்தில் இன்று பெரும்பாலான இடங்களிலும், நாளை முதல், எதிர்வரும் 23ஆம் திகதி வரை சில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரஷ்யாவுடன் வர்த்தகம் மேற்கொள்ளும் நாடுகள் மீது 500 வீத வரியை விதிக்கவுள்ளார் என ட்ரம்ப் எச்சரிகை



ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள், மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ள நேரிடும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதன்படி, ரஷ்யாவுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகளின் இறக்குமதி பொருட்களுக்கு 500 சதவீத மேலதிக வரியை விதிக்கவுள்ளதாக ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ரஷ்யா – உக்ரைன் இடையேயான போர் மூன்றாண்டுகளைக் கடந்தும் தொடர்கிறது. இந்தப் போரை நிறுத்த பல்வேறு முயற்சிகளை உலக நாடுகள் எடுத்தும், அதற்கான பலன் இதுவரை கிடைக்கவில்லை.

இந்த நிலையில், ரஷ்யாவுக்கு எதிரான மிகக் கடுமையான சட்டமூலத்தை, சில செனட் சபை உறுப்பினர்கள் உருவாக்கியுள்ளதாக ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி சட்டமூலத்தில், ரஷ்யாவுடன் வர்த்தகம் மேற்கொள்ளும் நாடுகள் மீது, 500 சதவீத கூடுதல் இறக்குமதி வரியை விதிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# காஸா தொடர்பான ட்ரம்ப்பின் திட்டத்தை ஐ.நாவின் பாதுகாப்புச் சபை அங்கீகரித்தது




காஸாவில் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பினால் முன்வைக்கப்பட்ட திட்டம், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சர்வதேச உறுதிப்படுத்தல் படையை ஸ்தாபித்து, பாலஸ்தீன அரசை உருவாக்கும் பாதையை நோக்கிய காஸாவுக்கான திட்டமாக, ட்ரம்ப் குறித்த திட்டத்தை முன்மொழிந்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி குறித்த திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 13 உறுப்பு நாடுகள் அங்கீகாரம் வழங்கியுள்ளன.

சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் குறித்த திட்டம் மீதான வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

முன்னதாக, இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன போராளிகள் குழுவான ஹமாஸ்/ம், காஸாவிற்கான ட்ரம்ப்பின் 20 அம்சத் திட்டத்தின் முதல் கட்டத்திற்கு, கடந்த மாதம் தமது இணக்கத்தைத் தெரிவித்திருந்தன.

எனினும், தற்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் அந்த இரண்டு தரப்புகளும் தமது ஆட்சேபனைகளை வெளியிட்டுள்ளன.

ட்ரம்ப்பின் இந்த புதிய திட்டம் இஸ்ரேலில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த திட்டத்தில் பாலஸ்தீனத்தைத் தனி அரசாக அங்கீகரிப்பது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளமையே அதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் காஸா தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஹமாஸும் நிராகரித்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த திட்டத்தின் ஊடாக சர்வதேச பொறிமுறையை காஸாவிற்குள் அமெரிக்கா திணிப்பதாக ஹமாஸ் குற்றஞ் சுமத்தியுள்ளது.

எனினும், தமது திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டமை தொடர்பில் ட்ரம்ப் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த திட்டம் தொடர்பான புதிய அறிவிப்புகள் விரைவில் வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# சட்டவிரோத அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்த புதிய விதிமுறைகளை அறிவித்துள்ளது பிரிட்டன்



பிரிட்டனுக்கான சட்டவிரோத அகதிகளின் வருகையைக் கட்டுப் படுத்துவதற்காக புதிய விதிமுறை கள் தொடர்பில் பிரிட்டனின் உள்துறைச் செயலாளர் ஷபானா மஹ்மூத் அறி வித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜூன் மாதம் வரையிலான, சட்டவிரோத வருகை கள் 27 வீதம் அதிகரித்துள்ளதைக் கண்டு தாம் அதிர்ச்சியடைந்துள்ள தாக வெளிநாட்டு ஊடகமொன்றுக் குக் கருத்து வெளியிட்டுள்ளார்.

இருப்பினும், சட்டவிரோத குடியேற் றத்தை எவ்வளவு குறைக்க விரும்பு கிறார் என்பதற்கான இலக்கை நிர்ணயிக்க அவர் மறுத்துவிட்டார்.

அகதிகளின் வருகையைக் கட்டுப் படுத்துவதற்காக புதிய விதிமுறைகள் தொடர்பான அறிவிப்பை அவர் நேற்று வெளியிட்டார்.

அவற்றில் முக்கிய அம்சங்கள் வருமாறு,

குடும்பங்களை வெளியேற்றுதல்:

குழந்தைகளுடன் கூடிய அதிக குடும்பங்களை வெளியேற்றுதல் – இது 3,000 பவுண்ட் வரையிலான ரொக்க ஊக்கத்தொகை மூலம் தன்னார்வமாகவோ அல்லது வலுக் கட்டாயமாகவோ வெளியேற்று வதாக இருக்கலாம். நிரந்தர

குடியுரிமைக்கு நீண்ட காத்திருப்பு:

வெற்றிகரமான தஞ்சம் கோருப வர்கள் நிரந்தர குடியுரிமை கோரக் காத்திருக்க வேண்டிய காலத்தை, ஐந்து ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகளாக நான்கு மடங்கு அதிகரித்தல்.

நிதி உதவியை நீக்குதல்:

தஞ்சம் கோருபவர்களுக்கு நிதி ஆதரவு வழங்குவதற்கான சட்ட பூர்வமான கடமையை நீக்குதல். இதன் மூலம், வேலை செய்ய உரிமை இருந்தும் செய்யாதவர்களுக்கு எந்த உதவியும் கிடைக்காது.

புதிய மேன்முறையீட்டு அமைப்பு:

தஞ்சம் கோரும் விண்ணப்பத்தை நிராகரிப்பது குறித்து முடிவெடுக்க எடுக்கும் நேரத்தைக் கணிசமாக விரைவுபடுத்த ஒரு புதிய மேன்முறை யீட்டு அமைப்பை அமைத்தல்.

ECHR சீர்திருத்தம்:

குடியேற்ற வழக்குகளில் ஐரோப்பிய மனித உரிமைகள் மாநாடு எவ்வாறு விளக்கப்படுகிறது என்பதை

சீர்திருத்துதல்.

விசா தடை:

நாடு கடத்தப்படுபவர்களை ஏற்க மறுக்கும் நாடுகளுக்கு விசா வழங்கு வதைத் தடை செய்தல். பாதுகாப்பான மற்றும்

சட்டப்பூர்வமான வழிகள்:

புதிய பாதுகாப்பான மற்றும் சட்ட பூர்வமான அகதிகள் வழிகளை உருவாக்குதல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த முன் மொழிவுகளுக்குத் தொழிலாளர் கட்சி யின் இடதுசாரிகள் மத்தியில் ஏற் கனவே எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

எனினும் தனது புகலிட சீர்திருத்த முயற்சியைத் தடுக்க முயற்சிப்பது இருண்ட சக்திகள் முக்கியத்துவம் பெற வழிவகுக்கும் என்று அவர் எச்சரித் துள்ளார்.

பக்கங்கள் - 03

கனடா முரசு


செவ்வாய்க்கிழமை 18/11/2025

மார்க் கார்னியின் முதல் வரவு-செலவுத் திட்டம்;

## குறைந்த வாக்குகளால் அங்கீகரித்தது நாடாளுமன்றம்



C2▶



# அமெரிக்கர்கள் இடம்பெயர விரும்பும் நாடுகளின் பட்டியலில் கனடா முதலிடம்

அமெரிக்கக் குடிமக்கள் 2026 ஆம் ஆண்டில் இடப்பெயர்வு செய்ய விரும்பும் மிகவும் பிரபலமான நாடுகளில் கனடா முதலிடத்தில் உள்ளதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

இந்த ஆர்வம் அதிகரிக்க முக்கியக் காரணிகளாக மலிவான வாழ்க்கைச் செலவு, சுகாதார சேவை மற்றும் பாதுகாப்பு ஆகியவை விளங்குகின்றன.

ஆய்வு ஒன்றின்படி, பதிலளித்தவர்களில் 24.4 வீதமானோர் கனடாவிற்கு இடம்பெயர்வதில் வலுவான விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகள் (34 வீதமானோருக்கு இதுவே முக்கிய கவலை), சுகாதாரச் செலவுகள் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையின்மை ஆகியவற்றால் தூண்டப்படும் அமெரிக்கர்களுக்கு, கனடாவின் அருகாமையும், கலாசார ஒற்றுமையும், உயர்தர வாழ்க்கைத்தரமும் இலகுவான தீர்வை வழங்குகின்றன.

C2▶

# கனடாவில் இடம்பெறும் மோசடி குறித்து எச்சரிக்கை



கனடாவில் இடம்பெறும் பாரிய மோசடி தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. விடுமுறை காலத்தில் நுகர்வோர் கவனமாக இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதிய மோசடி உருவாகி வருவதாக நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

செயற்கை நுண்ணறிவு போன்ற புதிய தொழில்நுட்பங்கள் மோசடிகளை கண்டறிவதை இன்னும் கடினமாக்கி வருவதாக பி.எம்.ஓ நிதி நிறுவனத்தின் நிதி குற்றப் பிரிவு தலைவர் லாரி செல்வின் தெரிவித்துள்ளார்.

முழு ஆண்டும் அபாயங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த காலத்தில் விற்பனையாளர்கள் அதிகமாக பணம் சம்பாதிக்கும் நேரம் என்பதால், மோசடிக்காரர்களும் அதே அளவில் செயல்படுகின்றனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மோசடிக்காரர்கள் ப்ராண்டுகள் அல்லது இன்ஃபுளென்சர்களைப் போல காட்சியளிக்கும் காணொலிகள், போலியான வலைத்தளங்கள், போலி மின்னஞ்சல்கள் ஆகியவற்றை உருவாக்க செயற்கை நுண்ணறிவினை பெருமளவில் பயன்படுத்தி வருகிறார்கள்.

மேலும் கியூ.ஆர். குறியீடுகளுக்குள் தீங்கிழைக்கும் இணைப்புகளை உள்ளடக்குவது தற்போது மிகவும் பரவலாக காணப்படும் மோசடி முறையாகும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொருள்களை கொள்வனவு செய்யும் போது வாடிக்கையாளர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.



# மார்க் கார்னியின் முதல் வரவு-செலவுத் திட்டத்தை குறைந்த வாக்குகளால் அங்கீகரித்தது நாடாளுமன்றம்

கனடாவின் நாடாளுமன்றம் பிரதமர் மார்க் கார்னியின் முதல் கூட்டாட்சி வரவு-செலவுத் திட்டத்தை குறைந்த வாக்குகளால் அங்கீகரித்துள்ளது. இது அவரது சிறுபான்மை தாராளவாத அரசாங்கத்திற்கு முன்கூட்டியே தேர்தலைத் தவிர்க்க அனுமதித்தது.

கனடாவின் பற்றாக்குறையை 78 பில்லியன் கனேடிய டொலர்களாக உயர்த்தும் நிதித் திட்டம், பசுமைக் கட்சித் தலைவர் எலிசபெத் மே உட்பட எதிர்க் கட்சி எம்.பி.க்களின் முக்கிய ஆதரவின் காரணமாக நிறைவேற்றப்பட்டது.

வரலாற்றில் இரண்டாவது பெரிய நிதித் திட்டத்தை எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

பிரதமர் மார்க் கார்னியின் இந்தத் திட்டம் ஆதரவாக 170 வாக்குகளும் எதிராக 168 வாக்குகளும் பெற்று நிறைவேற்றப்பட்டது.

கனடா மற்றும் இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளுக்கும் முன்னாள் மத்திய வங்கியாளராகப் பணியாற்றிய கார்னி, கனடா தனது பொருளாதாரத்தை வலுப்படுத்த உதவும் தலைமுறை முதலீடு என்று வரவுசெலவுத் திட்டத்தை ஆதரித்தார்.

# மாணவர் மானியத்துக்கு மேலதிகமாக நிதி இல்லை

## கனடா உயர்கல்வி நிபுணர்கள் கவலை



கனடாவில் பாதீட்டிற்கு அமைய மாணவர் மானிய திட்டத்தின் மூலம், முதுநிலை மாணவர்களுக்கு வழங்கப்படும் நிதி குறைக்கப்படலாம் என சில நிபுணர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாக பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தலாம் என, உயர்கல்வி யுக்தி அமைப்பின் தலைவர் அலெக்ஸ் அஷர் தெரிவித்துள்ளார்.

பாதீட்டில் தெரிவிக்கப்பட்ட முதுநிலை கல்வி குறித்து தெரிவிக்கப்பட்ட கருத்தினை பகுப்பாய்வு செய்து குறித்த ஆலோசனை நிறுவனம் இதனை குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறைந்த மற்றும் நடுத்தர வருமானத்தை கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான மானியமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வருடங்களில் மேலதிக நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை என தெரிவித்த அமைப்பின் தலைவர் அலெக்ஸ் அஷர், கொடுப்பனவாக வழங்கப்படும் 3 ஆயிரம் டொலரை நான்காயிரத்து 200 டொலராக அதிகரிக்க 2020 ஆம் ஆண்டு முதல் கோரிக்கை விடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

**அமெரிக்கர்கள்....**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவைத் தவிர, ஐக்கிய இராச்சியம் 12.2 வீத வாக்குகளுடன் இரண்டாம் இடத்திலும், ஜப்பான், அயர்லாந்து மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளும் முதல் ஐந்து இடங்களுக்குள் உள்ளன.

ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து, பொருளாதார அழுத்தங்கள், பாதுகாப்பு மற்றும் சுகாதாரச் சவால்கள் அதிகரித்து வரும் நிலையில், கனடா வழங்கும் ஸ்திரத்தன்மை மற்றும் வாழ்க்கைத்தரத்தின் கலவையே கனடாவை அமெரிக்கர்கள் விரும்பும் சிறந்த இடப்பெயர்வு இலக்காக மாற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கனடா நகர மண்டபங்களில் பாலஸ்தீனியக் கொடி; நீதிமன்றத்தை நாடியது இஸ்ரேல் ஆதரவுக் குழு

கனடாவின் பல நகரங்களின் நகர மண்டபங்களில் பாலஸ்தீனிய கொடிகள் ஏற்றப்பட்டன.

இந்த நிலையில் இஸ்ரேல் ஆதரவு குழுவான தஃப்சிக் அமைப்பு நகரத்தில் கொடி ஏற்றுவதைத் தடைசெய்யுமாறு நீதிமன்றம் சென்றுள்ளது.

சமூக ஊடகங்களில், இந்த விடயம் யூத சமூகத்திற்கு எதிரான வன்முறையினை தூண்டலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தடுக்கும் நோக்கில் பொறுப்பான குழுவின் செயல்பாட்டிற்கு தாம் ஆதரவு வழங்குவதாக தஃப்சிக் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சம்பந்தப்பட்ட தரப்பினர் இன்று நீதிமன்றத்தில் பிரசன்னமாவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து இஸ்ரேலிய சுதந்திர தினத்திற்கான இஸ்ரேலிய கொடி உட்பட நகர மண்டபங்களில் பல கொடிகள் ஏற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





